வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் :நாராயணசாமி

தேதி 15.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் ஆகிய 3 நாடுகளுக்கான பயணத்தின் முதல்கட்டமாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஜோர்டான் சென்று சேர்ந்துள்ளார்.

உயர் கல்வி நிறுவனங்களுக்கான விக்சித் பாரத் சிக்க்ஷா அதிஷ்டான் மசோதா, இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, கூட்டு நாடாளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டது.

இவ்வாண்டு நவம்பர் மாதத்தில், மத்தியஅரசின் பல்வேறு அமைச்சகங்கள், மற்றும், துறைகள், பொது மக்களின், 1 லட்சத்து 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குறைகளுக்கு தீர்வு கண்டுள்ளன.

புதுச்சேரியில், மரப்பாலம் சலவை நிலையக் கட்டிடம், நேதாஜி நகர் சுகாதார மீன் அங்காடி உள்ளிட்ட புதிய வசதிகளை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று திறந்து வைத்தார்.

-----------------------------------

மோடி பயணம் (13)

ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் ஆகிய 3 நாடுகளுக்கான பயணத்தின் முதல்கட்டமாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஜோர்டான் சென்று சேர்ந்துள்ளார். ஜோர்டான் மன்னர் **அப்துல்லா இபின் அல்-உசைன்** அழைப்பின் பேரில் மேற்கொள்ளப் பட்டுள்ள இப்பயணத்தின் போது, பிரதமர் திரு. நரேந்திரமோடி, ஜோர்டான் மன்னரையும், பிரதமரையும் சந்தித்து, விரிவான விவாதங்களை மேற்கொள்வார். ஜோர்டான் நாடாளுமன்றத்தின் கலப்புக் கூட்டத்தில் அவர் உரையாற்ற இருக்கிறார். இந்தியா-ஜோர்டான் உறவுகளை வலுப்படுத்துவதில் முக்கிய

பங்காற்றி வரும் இந்திய சமூகத்தினரை, அம்மானில், பிரதமர் சந்தித்து கலந்துரையாடுவார். இந்தியாவிற்கும், ஜோர்டானுக்கும் இடையிலான தூதரக உறவுகளின் 75 ஆண்டுகளை ஒட்டியதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் ஜோர்டான் பயணம் அமைவதும் குறிப்பிடத்தக்கது.

------------------------------------

*மோடி-எத்தியோப்பியா 1 (3)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாடுகளுக்கான தமது பயணத்தின் 2ஆம் கட்டமாக நாளை, எத்தியோப்பியா தலைநகர், அடிஸ் அபாபா சென்றடைகிறார். இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு....

*மோடி-எத்தியோப்பியா 2 (16)*

பிரதமரின் எத்தியோப்பியா பயணம், இந்தியாவில் வர்த்தகர்கள், மற்றும், முதலீட்டாளர்களுக்கு பல புதிய வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதாக அமையும் என எதிர்ப்பார்க்கப் படுவதாக, எத்தியோப்பியா நாட்டிற்கான இந்திய தூதர் திரு. அனில் குமார் ராய் தெரிவித்துள்ளார். எத்தியோப்பியாவில், முன்னணி இந்திய பெண் தொழில் முனைவோராகத் திகழும் திருமதி மைத்ரி ஜோஷி, பிரதமரின் பயணம் குறித்து ஆகாஷ்வாணி நிருபரிடம் பேசுகையில், பொதுவான கலாச்சாரம் ஒன்றை இருநாடுகளும் பகிர்ந்து கொள்வதையும், மகளிர் பிரச்சனைகள் குறித்து, அண்மையில் வெளிநாடு வாழ் இந்தியர் தினவிழாவில் இடம்பெற்ற குழு விவாத்ததில், எத்தியோப்பியா பங்கேற்றதையும், சுட்டிக் காட்டினார். இந்தியாவிற்கும், எத்தியோப்பியாவிற்கும் இடையே, நீண்ட கால தொடர்புகள் நிலவி வருவதும், பல ஆண்டு இடைவெளிக்கு பின்னர், இந்திய பிரதமர் ஒருவர் எத்தியோப்பியா செல்வது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆப்ரிக்க யூனியன் நாடுகளுடனான இந்தியாவின் உறவுகளும், தெற்குலக நாடுகளின் குரலாக திகழ்வதில் இந்தியாவின் நிலையும், பிரதமரின் இப்பயணத்தால் வலுவடையும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

------------------------------------

*மோடி-பட்டேல் (9)*

இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேல் நினைவு நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார். நாட்டை ஒன்றுபடுத்தும் பணிகளுக்கே வாழ்வை

முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர் சர்தார் பட்டேல் என்றும், ஒருங்கிணைந்த, வலுவான இந்தியா உருவானதில், பட்டேலின் பங்களிப்பை, நாடு ஒருபோதும் மறவாது என்றும் சமூக ஊடகத்தில் பிரதமர் கூறியுள்ளார். குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உட்பட பலரும், சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு நினைவஞ்சலி செலுத்தியுள்ளனர்.

-----------------------------------

மோடி-ஸ்குவாஷ் (15)

சர்வதேச அளவில் முதல்முறையாக நடத்தப்பட்ட, S-DAT ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டிகளில், கோப்பையை வென்று வரலாறு படைத்துள்ள இந்திய ஸ்குவாஷ் அணிக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த அணியில் இடம்பெற்ற, ஜோஷ்னா சின்னப்பா, அபய் சிங், வேலவன் செந்தில்குமார், அனாஹத் சிங் ஆகியோர், வலுவான மனஉறுதி, மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன், அபாரமாக ஆடி, நாட்டிற்கே பெருமை சேர்த்து இருப்பதாக, சமூக ஊடகத்தில் பிரதமர் கூறியுள்ளார். உலக அரங்கில் இந்திய விளையாட்டுத் துறையின் வலு அதிகரித்து வருவதையே, இந்த சாதனை வெளிப்படுத்தி இருப்பதாகவும், இதனால் ஸ்குவாஷ் விளையாட்டு மேலும் பிரபலமடைந்து, நாடு முழுவதிலும் எண்ணற்ற இளைஞர்கள், இந்த விளையாட்டில் ஆர்வம் காட்ட தொடங்குவார்கள் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உட்பட பலரும், இந்திய ஸ்குவாஷ் அணியினரை பாராட்டி உள்ளனர்.

-----------------------------------

*மசோதா (11)*

நடப்புத் தேவைகளுக்கு ஒவ்வாத பழைய சட்டங்களை நீக்கி, வேறு சில சட்டங்களை நடப்புத் தேவைகளுக்கு ஏற்றதாக, திருத்தம் செய்வதற்கான மசோதா, மக்களவையில் இன்று தாக்கல் செய்யப் பட்டது. மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால் இம்மசோதாவை தாக்கல் செய்தார். கல்வி, ஆராய்ச்சி, மற்றும், புதுமையாக்கத்தில், உன்னத நிலையை எட்டுவதில், நாட்டின் உயர் கல்வி நிறுவனங்களுக்கு உதவும் வகையில், விக்சித் பாரத் சிக்க்ஷா அதிஷ்டான்

என்ற பெயரில் தனி அமைப்பு ஒன்றை நிறுவ வகை செய்யும் மசோதாவும், முன்னதாக மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, எதிர்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையின் பேரில், கூட்டு நாடாளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

------------------------------------

*குறை தீர்ப்பு* (7)

மத்திய அரசின் நிர்வாக சீர்திருத்தம், பொது மக்கள் குறை தீர்ப்புத் துறை, பொது மக்கள் குறை தீர்ப்பு தொடர்பான, 43ஆவது மாதாந்திர அறிக்கையை, இன்று வெளியிட்டுள்ளது. இதன்படி, இவ்வாண்டு நவம்பர் மாதத்தில், மத்தியஅரசின் பல்வேறு அமைச்சகங்கள், மற்றும், துறைகள், பொது மக்களின், 1 லட்சத்து 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குறைகளுக்கு தீர்வு கண்டுள்ளன. சராசரியாக ஒரு குறையை தீர்க்க, 16 நாட்கள், எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------------------

*சிந்தியா விருது* (10)

140 ஆண்டுகளாக உலக அளவில் செயல்பட்டு வரும் **மின்சார, மற்றும், மின்னணு பொறியாளர் தரக் கட்டுப்பாட்டு சங்கத்தின் கார்ப்பரேட் விருதை**, இவ்வாண்டு, இந்தியாவின், **C-DOT டெலிமேட்டிக்ஸ் மேம்பாட்டு நிறுவனம்** வென்றுள்ளதை, மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. **ஜோதிராதித்யா சிந்தியா** பாராட்டியுள்ளார். இந்தியாவைச் சேர்ந்த ஒரு நிறுவனம், இவ்விருதை வெல்வது இதுவே முதல் முறை என்பதையும், வயர்லெஸ் அகன்ற அலைவரிசை, கிராமப்புறங்களுக்கான 5ஜி தொலைத் தொடர்பு உள்ளிட்ட துறைகளில், செயல்பாட்டு தரத்தை மேம்படுத்துவதில், **C-DOT** நிறுவனம் முக்கிய பங்காற்றி இருப்பதையும், அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

------------------------------------

*தகவல் ஆணையர்* (4)

மத்திய அரசின் தலைமை தகவல் ஆணையராக, திரு. ராஜ்குமார் கோயல், இன்று பதவியேற்றுக் கொணடார். புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, திரு. கோயலுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

------------------------------------

*கைலாஷ்நாதன்* (10)

புதுச்சேரி பொலிவுறு நகர வளர்ச்சி நிறுவனத்தின், நீடித்த வளர்ச்சிக்கான நகர்ப்புற திட்டத்தின் கீழ், புதுச்சேரி நகராட்சி சார்பில், மரப்பாலத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மரப்பாலம் சலவை நிலையக் கட்டிடம், வைத்திக்குப்பம் சலவை நிலையக் கட்டிடம், மற்றும், நேதாஜி நகர் சுகாதார மீன் அங்காடியை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் திறந்து வைத்தார். முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சம்பத், திரு. அன்பால் கென்னடி, மற்றும், தலைமைச் செயலர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

-----------------------------------

*தேர்தல் பார்வையாளர்* (6)

வரவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான பாரதீய ஜனதா கட்சியின் தேர்தல் பார்வையாளராக, மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. பியூஷ் கோயல் நியமிக்கப் பட்டுள்ளார். தமிழகத்திற்கான, கட்சியின் இணைத் தேர்தல் பார்வையாளர்களாக, மத்திய அமைச்சர்கள் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், திரு. முரளிதர் மோஹால், ஆகியோர் நியமிக்கப் படுவதாகவும், பிஜேபி இன்று அறிவித்துள்ளது.

-----------------------------------

*கிரிக்கெட்-ஷெஃபாலி* (9)

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில், தென்னாப்பிரிக்க அணிக்கு எதிராக, 78 பந்துகளில் 87 ரன் அடித்த இந்திய கிரிக்கெட் வீராங்கனை ஷெஃபாலி வர்மா, நவம்பர் மாதத்திற்கான ஐசிசி மகளிர் கிரிக்கெட் வீராங்கனையாக அறிவிக்கப் பட்டுள்ளார். இதே போட்டியில், ஷெஃபாலி, 7 ஓவர்களில், 36 ரன் கொடுத்து, 2 விக்கெட்டுகளை சாய்த்ததும் குறிப்பிடத்தக்கது. வரும் 21ஆம் தேதி விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள, இலங்கை மகளிர் அணிக்கு எதிரான 20 ஓவர் போட்டிகளில், ஷெஃபாலி வர்மாவின் சிறப்பான ஆட்டத்திற்கான கிரிக்கெட் ரசிகர்கள் ஆர்வம் வெளியிட்டுள்ளனர்.

-----------------------------------

*வானிலை* (9)

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகம், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், அதிகாலை வேளை ஓரிரு இடங்களில், லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், சமவெளிப் பகுதிகளுக்கான குறைந்தபட்ச வெப்பநிலை, தர்மபுரியில், 15.5 டிகிரி செல்சியசாக பதிவாகி உள்ளது. அதிகபட்சமாக ஈரோட்டில், 32.6 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாயிற்று.

-----------------------------------

*வேதாந்தி* (8)

அயோத்தி ராமர் கோவில் இயக்கத்தில் முக்கிய பங்காற்றியவர்களில் ஒருவரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராம் விலாஸ்தாஸ் வேதாந்தி, மத்திய பிரதேஷ் மாநிலம் ரேவா மாவட்டத்தில், இன்று மருத்துவமனை ஒன்றில் காலமானார். அவரது உடல் அயோத்திக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இறுதி சடங்குகள் அயோத்தில் நடைபெறும் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். ராம் விலாஸ் வேதாந்தி மறைவு குறித்து உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

-----------------------------------

*ரண் பூமி* (12)

எல்லைப்புற சுற்றுலாவை ஊக்குவிப்பதன் மூலம், எல்லைப்புற கிராமங்களில், உள்கட்டமைப்பு வசதிகளையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்கிலான, பாதுகாப்பு அமைச்சகத்தின் பாரத் ரண் பூமி தர்ஷன் திட்டத்தின் கீழ், சிக்கிம் மாநிலத்தில், போர் முக்கியத்துவம் வாய்ந்த 2 கணவாய் பகுதிகளான, Cho-La மற்றும், Dok-La பகுதிகள், சுற்றுலா பயணிகளுக்கு திறந்து விடப் படுவதாக, மாநில முதலமைச்சர் திரு. பிரேம் சிங் தமங், இன்று அறிவித்துள்ளார். எல்லையின் கடைசி கிராமத்தையும், நாட்டின் முதலாவது கிராமமாக மேம்படுத்துவதே தங்களின் நோக்கம் என்று, நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் கூறினார். இதுதொடர்பாக, மத்திய அரசின் சுற்றுலாத் துறையும், இந்திய ராணுவமும், சிக்கிம் அரசுக்கு அளித்து வரும் ஆதரவுக்கு, தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

-----------------------------------

கோயல்-சோலார் (9)

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில், சோலார் மின் உற்பத்தி 46 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாக, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். எரிசக்தித் துறையின் முன்னேற்றங்கள் குறித்து, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காற்று விசை மூலமான இந்தியாவின் மின் உற்பத்தித் திறனும், 53 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகத் தெரிவித்தார். கடந்த ஆண்டு இந்தியாவில், 1 பில்லியன் டன்னுக்கும் அதிகமான அளவில் நிலக்கரி உற்பத்தி செய்யப் பட்டதால், நிலக்கரி இறக்குமதி, 8 சதவிகிதம் குறைந்து இருப்பதாக அமைச்சர் கூறினார்.

-----------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் ஆகிய 3 நாடுகளுக்கான பயணத்தின் முதல்கட்டமாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஜோர்டான் சென்று சேர்ந்துள்ளார்.

உயர் கல்வி நிறுவனங்களுக்கான விக்சித் பாரத் சிக்க்ஷா அதிஷ்டான் மசோதா, இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, நாடாளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டது.

இவ்வாண்டு நவம்பர் மாதத்தில், மத்தியஅரசின் பல்வேறு அமைச்சகங்கள், மற்றும், துறைகள், பொது மக்களின், 1 லட்சத்து 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குறைகளுக்கு தீர்வு கண்டுள்ளன.

புதுச்சேரியில், மரப்பாலம் சலவை நிலையக் கட்டிடம், நேதாஜி நகர் சுகாதார மீன் அங்காடி உள்ளிட்ட புதிய வசதிகளை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று திறந்து வைத்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**